**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 191 /2021 PW1**

23.07.2025 **வா.சா.1 பவானி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1.04.1999ல் 5ம் பிரதிவாதி வனிதா அவருக்கு உரிய பங்கு சொத்தை அவரது தம்பி சீத்தாராமனுக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. வனிதா அவ்வாறு எழுதிக் கொடுத்தார் என்றும், எழுதிக் கொடுத்த தேதியில் இருந்து சீத்தாராமன் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சீத்தாராமன் சர்வே எண் 89/1பி என்ற எண்ணில் 84 செண்ட் நிலத்தை தன்னுடைய மனைவி 3ம் பிரதிவாதிக்கு தான பத்திரம் மூலம் 17.09.2010ல் எழுதி வைத்தார் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து பழைய சர்வே எண் 74/6பி ல் கண்ட 81 செண்ட் நிலத்தையும் அதில் உள்ள கிணற்றில் 4ல் 1 பாகத்தையும் 4ம் பிரதிவாதி ராஜாவிற்கு 15.04.2021 கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. ராஜா கிரையம் பெற்றார் என்றும் அவ்வாறு பெற்றதில் இருந்து அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றும், பட்டா அவர் பெயரில் தான் உள்ளது, அவர் தான் வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அதே போல் பிரதிவாதி சீதாராமன் சர்வே எண் 344/7சி, 344/7பி மற்றும் சர்வே எண் 344/7ஏ ல் கண்ட 1 ஏக்கர் 34 செண்ட் நிலத்தையும் அதில் உள்ள கிணற்றையும், பம்பு செட்டையும் 5ம் பிரதிவாதி வனிதாவிற்க 21.06.2021 ல் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் எழுதிக் கொடுத்தது உண்மை. ஆனால் சீதாராமன் வனிதாவின் மகன் ராஜாவை அழைத்துக் கொண்டு போய் அவராகவே செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொண்டார். வனிதா கிரையம் பெற்ற சொத்தை கிரையம் பெற்ற தேதியில் இருந்தே வனிதா அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சீத்தாராமன் தான் அனுபவித்து வருகிறார். வனிதா பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான் ஆனால் சீத்தாராமன் தான் அனுபவித்து வருகிறார். தாவா சொத்தில் வாதிக்கோ அவரது இறந்து போன தங்கைக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. சிவசக்தியும், அவரது இறந்து போன தங்கையும் அவரது அப்பாவிற்கு முறையான திருமணத்தின் மூலம் பிறந்தவர்கள் அல்ல என்றால் சரியல்ல. சீத்தாராமன் உயிருடன் இருக்கும் வரை சிவசக்தியோ அவரது இறந்து போன தங்கையும் வழக்கு சொத்தில் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல. நான் வாதிக்காக வழக்கறிஞர் நோட்டீஸ் கொடுத்த பிறகு பிரதிவாதிகள் என்னை வந்து பார்த்தார்களா என்றால் இல்லை. கிரையப் பத்திரம், செட்டில்மெண்ட் பத்திரம், விடுதலை பத்திரம் ஆகியவை பற்றி

என்னிடம் பிரதிவாதிகள் நேரில் வந்து சொன்னார்கள் என்றால் சரியல்ல. மேலும் சிவசக்திக்கோ, அவருடைய இறந்த சகோதரிக்கோ சொத்தில் பங்கு இல்லை என பிரதிவாதிகள் சொன்னார்கள் என்றால் சரியல்ல. சிவசக்திக்கும், அவரது இறந்த தங்கைக்கும் சொத்தில் பங்கு இல்லை என பிரதிவாதிகள் சொன்னார்கள் என்றும், அதனை நான் ஒத்துக்கொண்டேன் என்றும், அதனால் தான் பிரதிவாதிகள் எனக்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கோ, அவரது தங்கைக்கோ வழக்கு சொத்தில் எந்த பங்கும் இல்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.